1972 டிசம்பர் 2]

New Agricultural Colleges

* 16 *Q*.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have decided not to open any new Agricultural College in this State during the year 1972–73; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) நடப்பாண்டில் இம்மாநிலத்தில் வேளாண்மைக் கல்லூரி ஒன்றைத் தொடங்குவது குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

Agricultural Productivity Council

* 17 *Q*.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the details of the composition of the Farm Productivity Council?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இவ்வினா, தமிழ்நாடு வேளாண்மை உற்பத்திப் பெருக்க மன்றத்தைப் பற்றியது என்று கருதப்படுகிறது. ஏனெனில், பண்ணை உற்பத்திப் பெருக்க மன்றம் என்று எதுவும் இம்மாநிலத்தில் இல்லை. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாடு வேளாண்மை உற்பத்திப் பெருக்க மன்றத்தை நிறுவ அரசு முடிவு செய்துள்ளது. முதலமைச்சர், அதன் தலைவராகவும், வேளாண்மைத் துறை அமைச்சர் துணைத் தலைவராகவும் இருப்பர்.

இம்மன்றத்தின் அமைப்பு பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இதுபற்றி தற்பொழுது அரசு கவனித்து வருகிறது.

Kitchen gardens

* 18 *Q*.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the scheme for the promotion of Kitchen Gardens has been implemented in Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) சென்னை மாநகரில் வீட்டு வளவுகளுக்குள் உள்ள காய்கறித் தோட்டங்களில் காய்கறி உற்பத்தியை உயர்த்தும் நோக்குடன் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத் திட்டத்தின் கீழ் மாதிரிக் காய்கறித் தோட்டங்கள் அமைத்துக் காட்டுவதன் மூலம், காய்கறித் தோட்டம் அமைத்திருப்போர்களுக்கு தோட்டக்கலை பற்றியும் சொல்லித் தரப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், காய்கறி விதைகள் ஈடுசெய் விலையில் வழங்கப்படுகின்றன. 31—3—1972 வரை பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் 15 சதவீத ஈடுசெய்விலையில் கொடுக்கப்பட்டு வந்தன. தொழில் நுட்ப ஆலோசனைகளும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. ஒட்டுமாஞ்செடிகள், எலுமிச்சைச் செடிகள் போன்ற பழச் செடி நாற்றுகள் 25 சதவீத ஈடுசெய் விலையில் வழங்கப்படுகின்றன. அரசால் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு அடக்க விலையில் 50 சதவீதத்தில் தோட்டக் கருவிகள் வழங்கப்படுகின்றன. அனுமதிக்கப்படும் இந்த ஈடுசெய் விலைச் சலுகை, நிறுவனம் ஒன்றுக்கு ரூ. 50 என வரையறுக்கப்பட்டுள்ளது.

தென் மாநிலங்களுக்கிடையே உணவுப் பொருள்கள் பகிர்வு

***19 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென் மாநிலங்களுக்கிடையே உணவுப் பண்டங்கள் போக்குவரத்து பற்றியும், மிகுதியான உணவு தானியங்களைப் பரிவர்த்தனை செய்து கொள்வது பற்றியும் ஏற்பாடுகள் ஏதேனும் செய்யப்பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி . 1964-ம் ஆண்டு தென் மாநிலங்கள் (அரிசி ஏற்றுமதியை முறைப்படுத்துதல்) ஆணையின்படி தமிழ்நாடு ஒரு தனிமண்டலமாக உள்ளது. மாநிலத்துக்கு வெளியே அரிசி எடுத்துச் செல்வதற்கு அனுமதி வேண்டும். இந்திய அரசு குறிப்பிட்டுள்ள பங்கீட்டு அளவின்படி மாநிலங்களுக்கிடையில் அரிசிப் போக்குவரத்து முறைப்படுத்தப்படுகிறது. மாநிலங்களிடம் உபரியாகவுள்ள உணவு தானியங்களை இந்திய அரசின் மத்திய உணவுத் தொகுப்பு